**ஆசிரியர் தேர்வு வாரியம்**

**<u>பத்திரிக்கைச் செய்தி</u>**

பல்கலைக்கழக மானியக் குழுவின் புதுப்பிக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகள் 2023-ல், மாநில தகுதி தேர்வு நடத்துவதற்கான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன்படி, 2023 - 2024 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாடு மாநில தகுதி தேர்வு நடத்துவதற்கான முகமையாக மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தினை நியமித்து அரசால் ஆணையிடப்பட்டது.

இதனை தொடர்ந்து தமிழ்நாடு அரசின் சார்பாக தமிழ்நாடு மாநில தகுதித் தேர்வினை நடத்தும் முகமையாக ஆசிரியர் தேர்வு வாரியத்தினை நியமித்து அரசாணை (டி) எண். 278 உயர்கல்வித் (எச்1) துறை நாள் 17.12.2024 இன்படி அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

அதனடிப்படையில் 43 பாடங்களுக்கு மொத்தம் 99,178 விண்ணப்பதாரர்களின் விவரங்கள் பெறப்பட்டது. 06.03.2025, 07.03.2025, 08.03.2025 மற்றும் 09.03.2025 ஆகிய தேதிகளில் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் இணைய வழியில் தமிழ்நாடு மாநில தகுதித் தேர்வு நடத்தப்பட்டது. இதில் 76150 பணிநாடுநர்கள் தேர்வில் பங்கு கொண்டனர்.

இதன்படி விண்ணப்பதாரர்களின் மதிப்பெண் மற்றும் பல்கலைக்கழக மானியக் குழுவினால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி மதிப்பெண் மற்றும் இனச்சுழற்சி விதிமுறைகளை பின்பற்றியும் அரசாணை (நிலை) எண். 163 உயர்கல்வித் (எச்1) துறைநாள் 18.07.2025. ன்படி பெண்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் தமிழ் வழியில் கல்வி பயின்றவர்களுக்கான இடஒதுக்கீட்டினை பின்பற்றியும் தமிழ்நாடு மாநில தகுதித் தேர்வு 2024 இல் தகுதி பெற்றுள்ளவர்கள் பட்டியல் (TNSET -2024 Qualified List) பாடவாரியாக தயார் செய்யப்பட்டு இவ்வாரிய இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. தகுதிபெற்ற விண்ணப்பதாரர்கள் சான்றிதழ்களை இணையவழியில் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

இடம் : சென்னை – 06.
நாள் : 25.09.2025

தலைவர்